வாசிக்க: யோவான் 11:1-45

***"கடவுளிடம் அன்புகூருகிறவர்களுக்கு அனைத்தும் நன்மைக்காகவே நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோ 8:28)***

தமது நண்பன் லாசரு வியாதியாயிருக்கிறானென்ற செய்தி இயேசுவுக்குக் கிடைத்தது. வேறு யாரென்றாலும் உடனே தன் நண்பனுக்கு உதவவோ, கூடுமானால் ஓர் அற்புதம் செய்யவோ அங்கு விரைந்திருப்பர். ஆனால் இயேசுவோ "தாம் இருந்த இடத்திலே இன்னும் இரண்டு நாட்கள் தங்கினார்" (யோ 11:6). பின்னர் தமது சீடரிடம், "நான் அங்கே இல்லாததினால் நீங்கள் விசுவாசிக்க வாய்ப்புண்டாகிறதென்று உங்களுக்காக அகமகிழுகிறேன்" என்று அவர் சொன்னதிலிருந்து வேண்டுமென்றேதான் அவர் தாமதித்தாரென்பது தெளிவாகிறது (வச 15).

லாசருவைப் பார்க்க இயேசு உடனே சென்றிருந்தால் சுகமளிக்கும் ஓர் அற்புதத்தைச் செய்திருப்பார். ஆனால் அவர் பிந்திச் சென்றதால் அக்குடும்பத்திற்கு இன்னும் மேலான அற்புதம் கிடைத்தது—உயிர்த்தெழுதல்! இறைவனது தாமதங்கள் மறுப்புகளல்ல; அவரது வழிகளை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்காக நம்மையும் சூழ்நிலையையும் பக்குவப்படுத்துவதே அவைகளின் நோக்கமாகும்.

உடனடி அற்புத சுகங்களுக்காய்க் கடவுளைத் துதிப்போம். ஆனால், பெரும்பாலும் சுகங்கள் தாமதித்தும் படிப்படியாகவுந்தான் வருகின்றன என்பது மறுக்க முடியா உண்மை. சுவிசேஷங்களில் நாம் வாசிக்கும் இயேசுவின் சுகமாக்கும் அற்புதங்களெல்லாம் பெரும்பாலும் உடனடியானவை. ஆனால் விண்ணகத் தந்தைக்குமுன் பூரணக் கீழ்ப்படிதலோடு இயேசுவைப்போல் நடப்பது எவருமில்லை. எனவே வேறு யாருக்கும் கடவுள் அவ்வித வல்லமையைத் தரவில்லை. இதை ஒத்துக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் உண்மை உண்மைதான்.

திருமறையின்படியான பொறுமையென்பது, எதுவுமே நமது கட்டுக்குள்ளில்லை என்ற விதியைச் சாருவதல்ல; மாறாக, அது எல்லாமே கடவுளின் கரத்திற்குள்ளிருக்கிறதென்ற நம்பிக்கையில் வேரூன்றியுள்ளதாகும் (ரோ 8:28). தமது வாக்குகளையெல்லாம் கடவுள் உடனே நிறைவேற்றிவிடவேண்டுமென்று நாம் எதிர்பார்த்தால் விசுவாசத்திற்கு வேலையேயில்லையே! கடவுள் வாக்களித்தவைகளைப் பெற்றுக்கொள்ளப் பொறுமையான சகிப்பு இன்றியமையா நிபந்தனையாகும் (எபி 10:36; 6:12). பொறுமையாகக் காத்திருந்ததால் தாவீது அனுபவித்த விடுதலைகளின் சாட்சிகளால் திருப்பாடல் நூல் நிறைந்துள்ளது. "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்" (சங் 40:1). "தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்" (சங் 62:1). "பொறுமையென்பது கசப்பான செடி; ஆனால் அதின் பழமோ இனிப்பு" என்பது ஒரு ஜெர்மானியப் பழமொழி.

*துக்கம் திகில் இருள் சூழ, மோட்ச யாத்திரை செய்கிறோம்;*
*கீதம்பாடி முன்னே நோக்கி மோட்ச பாதை செல்கிறோம்.*
*மோட்சம் செல்லும் கோடிப்பேரும் பாடும் பாட்டு ஒன்றேயாம்;*
*ஆபத்து, போராட்டம், தெய்வ பாதை செல்வதும் ஒன்றாம்! (பாமாலை)*

*— B.S. Ingemann, 1789-1862*